11th February 1958]

Sri V. SANKARAN : எவ்வளவு குறைந்த வருவாய் கிடைப்பதாக இருந்தாலும் சரி, நகரத்தில் வாழும் வாழ்க்கைதான் நல்லது என்று நினைக்கும் நிலைமையில், கிராமத்தில் வேலை செய்வதற்கு போகும் டாக்டர்களுக்கு வழக்கமாகக் கொடுப்பதைவிட அதிகமாக 50 அல்லது 75 ரூபாய் கொடுத்தால், கிராமத்திற்குப்போய் வேலை செய்யக்கூடிய டாக்டர்கள் அதிகமாகக் கிடைப்பார்கள். அம்மாதிரி செய்ய சர்க்கார் முன் வருவார்களா?

The Hon. Sri M. A. MANICKAVELU : பிரைமரி ஹெல்த் சென்டர் டாக்டர்களுக்கு, தனி வைத்தியம் செய்வதற்காக ரூ. 50 கொடுத்து வந்ததை பகீரதப் பிரயத்தனத்தின் பேரில் ரூ. 100 ஆக்கினோம் அது வரைக்கும்தான் செய்ய முடிந்தது.

Bagyalakshmi Mill, Pollachi

* 48 *Q*.—Sri N. K. PALANISWAMI (on behalf of Sri P. S. Chinnadurai) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether the Bagyalakshmi Mill at Pollachi has been closed;

(*b*) if so, the reasons therefor; and

(*c*) the steps taken by the Government to give relief to the workers affected by the closure of the mill?

The Hon. Sri R. VENKATARAMAN : (*a*) & (*b*) Yes, Sir. The Pollachi Bagyalakshmi Mills, Pollachi, was closed on 3rd December 1957 due to financial difficulties.

(*c*) The workers have been advised to file claim petitions for payment of arrears of wages and lay-off compensation and retrenchment compensation.

Sri N. K. PALANISAMI : போதுமான முதலீடு இல்லாத காரணத்தால் அந்த மில் மூடப்பட்டிருக்கின்றது. ஆகையால் சர்க்காரே அதை எடுத்து நடத்துவதற்கான யோசனை இருக்கிறதா ?

The Hon. Sri R. VENKATARAMAN : நஷ்டம் அடைந்த மில்களையெல்லாம் சர்க்கார் நடத்துவது என்ற கொள்கையை நாங்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்று நான் மீண்டும் மீண்டும் சொல்லியிருக்கிறேன். இந்த மில் ஏராளமாக நஷ்டம் அடைந்து விட்டது. இன்னும் சர்க்காருக்குக் கொடுக்கவேண்டிய விற்பனை வரியைக் கூட கொடுக்கவில்லை. ஆகையால், இதை நடத்த முடியவில்லை என்று அவர்கள் மூடிவிட்டார்கள்.

Sri A. R. MARIMUTHU : தொழிலாளர்களுக்கு வரவேண்டிய சம்பளப் பாக்கி அதிகமாக இருப்பதால், அந்தத் தொழிலாளர்களுக்குச் சர்க்கார் ஏதாவது உதவித் தொகை கொடுப்பதைப் பற்றி ஆலோசிக்குமா ?

The Hon. Sri R. VENKATARAMAN : சர்க்கார் இதற்கு உதவி கொடுக்க இயலாது.